அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் Code of Behaviour-ம் Bridging Visaகளும்

நீங்கள் இணைப்பு விசா E (Bridging Visa E) ஒன்றைக் கொண்டிருந்தால் அல்லது அதனைப் பெறுவதாயின், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நடத்தைக் கோவை (Code of Behaviour) உங்களுக்கு முக்கியமானதாகும்.

Code of Behaviour ஆனது நீங்கள் அவுஸ்திரேலியச் சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றுவீர் எனும் ஒரு வாக்குறுதி ஆகும். இந்தத் தகவல் இதழ்கள் Code of Behaviour இன் கீழ் உமது சட்ட உரிமைகளையும் பொறுப்புக்களையும் எடுத்துரைக்கிறது.



(Tamil)

Code of Behaviour—சட்டத் தகவல்

Code of Behaviour என்றால் என்ன?

Code of Behaviour ஆனது நீங்கள் அவுஸ்திரேலியச் சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றுவீர் எனும் ஒரு வாக்குறுதி ஆகும். அது நீங்கள் ஒப்பமிடும் ஒரு படிவம் ஆகும். உங்களது Bridging Visa E* ஐப் பெறுவதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக நீங்கள் Code of Behaviour இல் ஒப்பமிட்டாக வேண்டும். Code of Behaviour இவ்வாறாகத் தோன்றும்.


Australian Government
Department of Immigration and Border Protection

Code of Behaviour
for Subclass 050 Bridging (General)
visa holders

Form
1443

உங்களுக்கு என்ன விசா இருக்கிறது என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரியாவிடின் Department of Immigration மற்றும் Border Protection இற் சரி பார்க்க அல்லது அதைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு உதவுமாறு உமது வழக்கு பணியாளரிடம் கேட்க.

எனக்கு அவுஸ்திரேலியச் சட்டங்களையும் விதிகளையும் பற்றி அவ்வளவு தெரியாவிடின் என்ன செய்வது?

அவுஸ்திரேலியாவில் எத்தனையோ சட்டங்களும் விதிகளும் இருக்கின்றன. அவுஸ்திரேலியாவிலுள்ள அனைவரும் இச்சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றியாக வேண்டும். சட்டத்தின் கீழ் அனைவருக்கும் உரிமைகள் உண்டு.

நீங்கள் எந்தச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டியுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வது உங்களைப் பொறுத்தது. அது நியாயமானதாகத் தென்படாதிருக்கலாம், ஆயினும் 'நான் சட்டத்தைப் பற்றி அறியவில்லை' என்று கூறுவது பொருத்தமற்றது. இந்தத் தகவல் இதழ்களின் இறுதியில் பட்டியலிடப்பட்டுள்ள சேவைகளிலிருந்து, உங்களுக்குத் தேவையாயின் இலவச சட்டத் தகவல்களையும் உதவியையும் பெறலாம்.

சட்டங்களை நான் பின்பற்றாவிட்டால் என்ன நிகழும்?

இதன் பொருள் நீங்கள் Code of Behaviour ஐ மீறிவிட்டீர்கள் என்பதாவதுடன், Department of Immigration உங்களுடைய விசாவை இரத்துச் செய்யலாம்.

நீங்கள் இத்தகைய சட்டங்களை மீறினால் அவர்கள் இதைச் செய்யலாம்:

- ஆபத்தானவாறு வாகனம் ஓட்டுவது அல்லது உமது கார் செலுத்துவதற்குப் பாதுகாப்பானதென்பதை உறுதி செய்யாமலிருப்பது
- எவரையேனும் வேதனைப்படுத்துவது அல்லது அவர் மீது வன்முறையைப் பிரயோகிப்பது.

நீங்கள் பின்வருமாறு நடந்து கொண்டாலும் Department of Immigration உமது விசாவை இரத்துச் செய்யலாம்:

- சமுதாயம் மிகவும் பாதுகாப்பின்மையை உணர வைப்பவற்றைச் செய்வது
- முக்கியான சந்திப்பொன்றுக்குச் செல்வது போன்று, திணைக்களம் உங்களைச் செய்யுமாறு சொல்வதைச் செய்யாதிருப்பது.

எனது விசா இரத்துச் செய்யப்பட்டால் என்ன நிகழும்?

விசா ஒன்று இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர், திணைக்களம் உங்களுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கலாம் அல்லது விசா நிபந்தனைகள் சிலவற்றை மாற்றலாம்.

இணைப்பு விசா ஒன்று இரத்துச் செய்யப்படும் போது, நீங்கள் குடிவரவுத் தடுப்புக் காவலுக்குச் செல்லும் சாத்தியமுள்ளது.

நான் Code of Behaviour ஐப் பற்றி மேலும் கூடுதலாகத் தெரிந்துகொள்ளலாமா?

நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதில் உங்களுக்கு உறுதியில்லாவிடின், உதவிக்காக உமது வழக்கு பணியாளரிடம் கேட்க. Code of Behaviour ஐப் பற்றி உங்களிடம் கேள்விகள் எவையேனும் இருந்தால், நீங்கள் எங்கிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என உமது வழக்கு பணியாளரிடம் கேட்க, அல்லது பின்வரும் சேவைகளைத் தொடர்பு கொள்க.

சட்டத்தரணி ஒருவர் எனக்கு உதவலாமா?

நீங்கள் இலவச உதவி பெறக்கூடிய நிலைமைகளாவன:

- நீங்கள் சட்டச் சிக்கலில் அகப்பட்டுள்ளீர் அல்லது அவ்வாறு அகப்படுவீர் என நினைக்கிறீர்கள்
- உமது விசா விரைவிலேயே முடிவடைவதுடன், கடந்த காலத்தில் நீங்கள் சிக்கலில் அகப்பட்டீர்கள்
- திணைக்களம் உமது விசாவை இரத்துச் செய்யலாமென நீங்கள் நினைக்கிறீர்கள்
- 'விசாவை இரத்துச் செய்யும் நோக்கத்தைப் பற்றி அறிவித்தல்' ஒன்றை நீங்கள் பெறுகிறீர்.

சட்டச் சேவைகள் குற்றவியற் சட்டங்களையும் ஏனைய சட்டச் சிக்கல்களையும் பற்றி ஆலோசனை வழங்கவும், நீங்கள் புலப்பெயர்வுச் சட்ட ஆலோசனையை எங்கு பெறலாம் என்பதை விளக்கவும் முடியும்.

காத்திருக்க வேண்டாம். சட்ட ஆலோசனையை விரைவாகப் பெறுவது முக்கியம்.

இலவச சட்டத் தகவல்களுக்கும் ஆலோசனைக்குமாகத் தொடர்பு கொள்க:

NT Legal Aid Commission
1800 019 343 www.ntlac.nt.gov.au

Cth Ombudsman 1300 362 072
www.ombudsman.gov.au

Text here and number
Website

மொழிபெயர்ப்பாளர்களும் உரைபெயர்ப்பாளர்களும்

Translating and Interpreting Service (TIS) ஐ 13 14 50 இல் அழைத்து, உங்களுக்காக சட்டச் சேவை எண்ணை அழைக்குமாறு உரைபெயர்ப்பாளர் ஒருவரைக் கேட்க. சட்டச் சேவையினர் உங்களுக்குச் சரியான தகவலைத் தருவதற்காக அவர்களுக்கு உமது விசாவைப் பற்றிக் கூறுக. அது அவசரம் என்பதை அவர்களுக்குக் கூறுக.